# பொருளாதார சேவைக் கட்டணம் (ESC)

இக்கட்டுரை வரிமதிப்பாண்டு 2017/18 இற்குப் பொருத்தமான சட்டத்தை விபரிக்கிறது.

**பொறுப்பு**

வர்த்தகம், வியாபாரம், தொழில் அல்லது வேலையினை கையாள்கின்ற அல்லது முன்னெடுக்கின்ற ஒவ்வொரு நபரும் அல்லது பங்குடமையும், அந்நபர் அல்லது பங்குடமை வருமான வரி செலுத்துவதற்கான பொறுப்பைக் கொண்டிருப்பினும் அல்லது கொண்டிருக்காது விடினும் ESC ஐச் செலுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுகிறது.

எவ்வாறாயினும், கூட்டுறவுச் சங்கங்கள், விமானப் போக்குவரத்து மற்றும் கப்பல் போக்குவரத்துக் கம்பனிகள், உள்ளூர் அரச நிறுவனங்கள், அரச திணைக்களங்கள், ஏதாவது விநியோகத்தர், லொத்தர் சீட்டுகளின் ஏதாவது விற்பனையாளர், ஏதாவது அலகு நம்பிக்கை மற்றும் பரஸ்பர நிதி மற்றும் லக் சதொச ஆகியன ESC செலுத்துவதற்கான பொறுப்பைக் கொண்டிருக்கவில்லை.

**வரி அடிப்படையும் நுழைவு நிலையும்**

ஒவ்வொரு நபரும் அல்லது பங்குடமையும் 2017.04.01 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னரான திகதியில் ஆரம்பிக்கப்படுகின்ற எந்தவொரு காலாண்டிற்காகவும், காலாண்டு ஒன்றின் புரள்வு 12.5 மில்லியன் ரூபாயினை விஞ்சுமாயின் ESC இனைச் செலுத்துதல் வேண்டும்.

**ESC வீதம்**

சம்பந்தப்பட்ட புரள்வின் மீது 0.5 % ஏற்புடையதாகும். (2016.04.01 இலிருந்து நடைமுறையில் உள்ளது)

**விதிப்புக்கு உட்பட்ட புரள்வு**

ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் மூலமான தொகை. இது உண்மையில் பெறப்பட்டதாகவோ அல்லது இல்லாமலோ இருக்கலாம். ஆயினும், பின்வருவன விதிப்புக்கு உட்பட்ட புரள்வினுள் உள்ளடங்காது.

- VAT
- மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்தான வருவாய்
- அறவிடமுடியாக் கடன்கள்

**எரிபொருள் நிரப்பு நிலையங்களின் ESC பொறுப்பு**

2017.04.01 இல் அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் ஏதாவது காலாண்டில், ஏதாவது எரிபொருள் நிரப்பு நிலையத்தின் பெற்றோல், டீசல் அல்லது மண்ணெண்ணெய் விற்பனையிலிருந்தான புரள்வு (ஏதாவது காலாண்டிற்கான விதிப்புக்கு உட்பட்ட புரள்வின் மொத்தம் 12.5 மில்லியன் ரூபாயை விஞ்சுமாயின்) ESC விதிப்புக்கு உட்பட்டதாகும்.

எவ்வாறாயினும், ESC ஆனது பெற்றோல், டீசல் அல்லது மண்ணெண்ணெயின் சம்பந்தப்பட்ட புரள்வினது 1/10 பங்கின் மீதும் ஏனைய பொருட்கள் (மசகு எண்ணெய் போன்றவை) மற்றும் சேவைக் கட்டணங்களில் (ஏதாவது இருப்பின்) இருந்தான புரள்வின் மொத்தத் தொகையின் மீதும் கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

**வரிக் கொடுப்பனவு**

ESC ஆனது சுய மதிப்பீட்டு அடிப்படையில் நான்கு காலாண்டுகளுக்குச் செலுத்த வேண்டியுள்ளது.

| **காலாண்டு** | **கொடுப்பனவுத் திகதி** |
|---|---|
| 1 ஆவது காலாண்டு | யூலை 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன் |
| 2 ஆவது காலாண்டு | அக்டோபர் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன் |
| 3 ஆவது காலாண்டு | சனவரி 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன் |
| 4 ஆவது காலாண்டு | ஏப்ரல் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன் |

**முற்பண ESC யும் வரி எதிரீடும்**

சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் (நுழைவுநிலை வரையறையைப் பொருட்படுத்தாது) சான்றுப்படுத்தப்பட்ட CIF பெறுமதியின் மீது சுங்கத்தினால் குறிப்பிட்ட பொருட்களின் இறக்குமதியில் ESC ஆனது முற்பணமாக விதிக்கப்படலாம். அவை பின்வருமாறு;

- விசேட பண்டத் தீர்வை சம்பந்தப்பட்ட ஏதாவது பொருளின் மீது
- தங்கம், மதிப்புமிக்க உலோகங்களின் மீது
- மோட்டார் வாகனங்கள் மீது

சுங்கத்திற்கு முற்பணமாகச் செலுத்தப்பட்ட ESC ஆனது குறித்த பொருள் தடைநீக்கப்பட்டு (clearance) ஒப்படைக்கப்பட்ட திகதி இருக்கின்ற காலாண்டின் ESC பொறுப்புக்கு எதிராக வரவு வைக்கப்பட முடியும். எவ்வாறாயினும், ESC யின் மீதிப் பொறுப்பானது (ஏதும் இருப்பின்) காலாண்டு முடிவடைந்து அடுத்துவரும் மாதத்தின் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும்.

2016.04.01 இல் அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் காலப்பகுதிக்காக முற்பணமாகவும் சுய கொடுப்பனவாகவும் செலுத்தப்பட்ட ESC, சம்பந்தப்பட்ட வரிமதிப்பாண்டிற்காகச் செலுத்த வேண்டிய வருமான வரிக்கு எதிராக எதிரீடு செய்யப்பட முடியும் என்பதுடன் மிகை ஏதாவது இருப்பின் அது, இரண்டு அடுத்துவரும் வரிமதிப்பாண்டின் பொறுப்புகளுக்கு எதிராக எதிரீடு செய்வதற்காக முன்கொண்டு செல்லப்பட முடியும்.

எவ்வாறாயினும், 2016.03.31 உடன் முடிவடைந்த காலப்பகுதிக்காக செலுத்தப்பட்ட ESC யின் மிகை ஏதாவது இருப்பின், அது நான்கு அடுத்துவரும் வரிமதிப்பாண்டின் பொறுப்புகளுக்கு எதிராக எதிரீடு செய்வதற்காக முன்கொண்டு செல்லப்பட முடியும்.

**திரட்டுகளைச் சமர்ப்பித்தல்**

ESC திரட்டானது அந்த வரிமதிப்பாண்டு முடிவடைந்து உடனடியாக அடுத்துவரும் மாதத்தின் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் வருடாந்தம் அளிக்கப்படுதல் வேண்டும். (அதாவது, 2017/18 வரிமதிப்பாண்டிற்காக 2018 ஏப்ரல் 20 ஆந் திகதி)

**உதாரணம் 01**

வரையறுக்கப்பட்ட சசிர (தனியார்) கம்பனி உள்ளூர்ச் சந்தைக்கு ஆடைகளை உற்பத்தி செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. 2017/18 வரிமதிப்பாண்டின் ஒவ்வொரு காலாண்டிற்கு மான புரள்வு கீழே தரப்பட்டுள்ளது :

| **காலாண்டு** | **புரள்வு (ரூ.)** |
|---|---|
| 2017 யூன் 30 இல் முடிவடையும் காலாண்டு | 29,600,000 |
| 2017 செப்ரெம்பர் 30 இல் முடிவடையும் காலாண்டு | 10,500,000 |
| 2017 டிசெம்பர் 31 இல் முடிவடையும் காலாண்டு | 34,500,000 |
| 2018 மார்ச் 31 இல் முடிவடையும் காலாண்டு | 82,000,000 |
| | **156,600,000** |

2017/2018 ஆம் வரிமதிப்பாண்டிற்கான பொருளாதார சேவைகள் கட்டணப் (ESC) பொறுப்பினை மதிப்பிடுக.

**<u>விடை :</u>**

| **காலாண்டு** | **புரள்வு (ரூ.)** | **ESC பொறுப்பு (ரூ.)** |
|---|---|---|
| 2017 யூன் 30 இல் முடிவடையும் காலாண்டு | 29,600,000 | 148,000 |
| 2017 செப்ரெம்பர் 30 இல் முடிவடையும் காலாண்டு | 10,500,000 | விதிப்புக்கு உட்படாது |
| 2017 டிசெம்பர் 31 இல் முடிவடையும் காலாண்டு | 34,500,000 | 172,500 |
| 2018 மார்ச் 31 இல் முடிவடையும் காலாண்டு | 82,000,000 | 410,000 |
| | **156,600,000** | **730,500** |

**உதாரணம் 02**

வரையறுக்கப்பட்ட தேவராசா (தனியார்) கம்பனியானது ஓர் முன்னணி உணவு பதப்படுத்தும் கம்பனி ஆகும். 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான பின்வரும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன :

| | **(ரூ.)** |
|---|---|
| உணவு விற்பனை – கம்பனியால் உற்பத்தி செய்யப்பட்டவை | 64,500,000 |
| உணவு விற்பனை - இறக்குமதி செய்யப்பட்டவை | 12,560,000 |
| அலுவலக உபகரணம் மீதான விற்பனை வருமானம் | 1,250,000 |
| வட்டி வருமானம் | 400,000 |

2018 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான பொருளாதார சேவைகள் கட்டணத்தை (ESC) மதிப்பிடுக.

**<u>விடை :</u>**

| | **ரூ.** |
|---|---|
| உணவு விற்பனை – கம்பனியால் உற்பத்தி செய்யப்பட்டவை | 64,500,000 |
| உணவு விற்பனை - இறக்குமதி செய்யப்பட்டவை | 12,560,000 |
| அலுவலக உபகரணம் மீதான விற்பனை வருமானம் | - |
| வட்டி வருமானம – விதிப்புக்கு உட்படாது | - |
| | 77,060,000 |
| **0.5% இல் ESC** | **<u>385,300</u>** |